**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.141/2022**
**PW.2**
**Date:** 15.05.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. அருள் முருகன் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | வெங்கடேசன் | மதம் | |
| கிராமம் | படுர் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **15th day may 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை;</u>**

1. நான் டாட்டா ஏசி ஓட்டுநராக வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் **(1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்)** ஆகியவற்றில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடைய தான். கடந்த 29/04/2019 அன்று காலை சுமார் 7.15 மணியளவில் நான் கோவளம் சென்று கொண்டு இருந்தபோது டோல்கேட் முன்பாக போலிசார் பார்த்திபன்

என்பவரை போலிசர் பிடித்து இருந்தார்கள். ஆஜர் 1 ஆம் எதிரிதான் அவர். போலிசார் அவரை விவாரித்து சென்னேரிகுப்பத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு இருந்த மெக்கானிக் shop ல் இருந்து சுமார் 12 இருசக்கர வாகனங்களை போலிசார் கைப்பற்றினார்கள்.

2. அதற்காக என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்று கொண்டார்கள். **(29/04/2019 தேதியிட்ட 1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் கைபற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் முறையே அ.சா.ஆ. 4 முதல் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

3. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சென்னேரிகுப்பத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். போலிசார் கேட்டு கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 மற்றும் 2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரிகள் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை** இல்லை

**S/d– K.Nilavarasan, 15.05.2025**

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

**DM cum JM/TPR.**

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.141/2022**

**PW.1**

**Date:** 15.05.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கார்த்திக் ராஜா | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | முருகன் | மதம் | |
| கிராமம் | படூர் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **15th day may 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை;</u>**

1. நான் டாட்டா ஏசி ஓட்டுநராக வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் **(1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்)** ஆகியவற்றில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடைய தான். கடந்த 29/04/2019 அன்று காலை சுமார் 8.15 மணியளவில் நான் கோவளம் சென்று கொண்டு இருந்தபோது டோல்கேட் அருகில் இருநபர்களை போலிசர் பிடித்து

இருந்தார்கள். நான் அது குறித்து விசாரித்தேன். இருசக்கர வாகனம் திருட்டு சம்பந்தமாக விசாரிப்பதாக சொன்னார்கள். தற்போது ஆஜரில் உள்ள 1 வது எதிரி தான் அவர் மற்றொருவர் ஓடிவிட்டார்.

2. 1வது எதிரி வாக்குமூலம் கொடுத்தார் அதன் பினனர் போலிசார் என்னை சென்னேரிகுப்பத்திற்கு அழைத்து சென்றார்கள் அங்கு 6 இருசக்கர வாகனங்களை கைப்பற்றினார்கள். Hero Honda splender, Pulser. Honda shine, Honda passion உள்ளிட்ட வானங்களை கைப்பற்றினார்கள். நான் அதற்காக தான் தற்போது காட்டிய கையொப்பம் செய்தேன். (29/04/2019 **தேதியிட்ட 1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் கைபற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் முறையே அ.சா.ஆ. 1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

3. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சென்னேரிகுப்பத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். போலிசார் கேட்டு கொண்டதன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 மற்றும் 2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**S/d– K.Nilavarasan, 15.05.2025**

Taken down by me in open court read over in
the witness in the presence of the accused and
admitted by the witness to be correct

**DM cum JM/TPR.**